மாப்பிள்ளையூரணி ஊராட்சி மன்றத்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திரு.ரா.சரவணக்குமார்

அனுமதி எண் : 4/2023-2024 நாள் : 04.03.2024

பொருள் : மனைப்பிரிவு அங்கீகாரம்- தூத்துக்குடி மாவட்டம் -தூத்துக்குடி உள்ளூர் திட்டப்பகுதி - தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் - மாப்பிள்ளையூரணி ஊராட்சி மன்றம் கிராமம் சர்வே எண் 119/1A7B3 ல் 3382 ச.மீ (0.835 ஏக்கர்) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அங்கீகாரம் வழங்கி ஆணையிடப்படுகிறது.

பார்வை: 1)நகர் ஊரமைப்பு தூத்துக்குடி மாவட்ட துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்: 19799/2020 தூ.மா.அ1 நாள் :24.12.2020

2)சாலை உள்ளாட்சிக்கான இடம் மற்றும் மின்வாரியத்திற்கான இடத்திற்கான ஒப்படைப்பு தானபத்திர எண் 1011/2024 நாள் : 26.02.2024

3)மனுதாரர் திரு.J.அன்டன் சுபாஷ் விண்ணப்பம் 13686/2017LA1 நாள் :08.09.2017, (மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் துணை இயக்குநர் தூத்துக்குடி அவர்களுக்கு முகவரியிட்டது)

ஆணை:

தூத்துக்குடி மாவட்டம் தூத்துக்குடி உள்ளூர் திட்டப்பகுதி தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியம் மாப்பிள்ளையூரணி ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண் 119/1A7B3 ல் 3382ச.மீ (0.835 ஏக்கர்) பரப்பளவுடன் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு பார்வை 1- ல் கண்டுள்ளபடி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் , தூத்துக்குடி மாவட்டம் அவர்களால் மனைப்பிரிவு உத்தேசம் பரிசீலிக்கப்பட்டு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கீழ்காணும் பொது நிபந்தனைகளுடன் "இறுதி மனைப்பிரிவு அங்கீகாரம்" வழங்கி ஆணையிடப்படுகிறது.

1.மேற்காணும் மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் பூங்கா மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும் இதில் எவ்வித விதிமீறலும் அனுமதிக்கப்படாது.

2.சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.மேலும் அதன்மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம் .

3.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் தார்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

4.மனையில் கட்டிடம் கட்ட தனியாக அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் .

5. ஒப்புதல் அளிக்கப்பட்ட நுழைவுவாயில் ' 6*4 ' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்க வேண்டும் .

6.பார்வை (1) ல் கண்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் இந்த மனைப்பிரிவுகளுக்கு பொருந்தும்.

தலைவர்
மாப்பிள்ளையூரணி ஊராட்சி

இணைப்பு:

சர்வே எண் 119/1A7B3
மாப்பிள்ளையூரணி கிராமத்தில் அமையும்
குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் -1 எண்ணிக்கை

பெறுநர் :

திரு. அன்டன் சுபாஷ்
தூத்துக்குடி.

நகல் :

1.சார்பதிவாளர் அவர்கள் தூத்துக்குடி கீழூர் அலுவலகம்
2.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
தூத்துக்குடி மாவட்ட அலுவலகம் தூத்துக்குடி-2
3.வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)
தூத்துக்குடி (இருப்பு) புதுக்கோட்டை
4.மாப்பிள்ளையூரணி ஊராட்சி இருப்பு கோப்பு



மாப்பிள்ளையூரணி ஊராட்சி
மனைப் பிரிவு ஒப்புதல்

அனுமதி எண் : 4 நாள் : 04.03.24-ல் கண்டுள்ள தலைவர் அவர்களின் உத்தரவுபடி மனைப்பிரிவு வரைபடம் நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தலைவர்
மாப்பிள்ளையூரணி ஊராட்சி.

Signature valid

Signed by: Assistant Director
Location: Thoothukudi
Date: 2024.02.29 18:17:16

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தூத்துக்குடி மாவட்டம்
தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம்
மாப்பிள்ளையூரணி ஊராட்சி

தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம், மாப்பிள்ளையூரணி ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவை எண்: 119/1A7B3 -ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள பதிவு எண்: Y18XSBWS/THOOTHUKUDI/TCP/2024
அளவு திட்டம் : 1 : 400

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் மொத்த பரப்பு	- 3382.00ச.மீ. (83.58 செண்ட்)
உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு	- 1204.02ச.மீ
சாலை நீங்கலாக மனைகளின் பரப்பு	- 2177.98ச.மீ
கோரிய மனைகள்	- 26
ஒதுக்கிய மனைகள்	- 26
மனைப்பிரிவு இடத்தின் எல்லை	
நிலையிலுள்ள சாலை	

பொது ஒதுக்கீடுகள்:

பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பின் படி உரிய கட்டணத் தொகை மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. மனைப்பிரிவு சாலைகள், உள்ளாட்சி ஒதுக்கீடு மற்றும் மூலை முடக்குகள் தான பத்திரம் ஆவண எண். 1010/2024, நாள்.26.02.2024 - ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

உத்தேச மனைப்பிரிவு சாலை	
உள்ளாட்சி ஒதுக்கீடு - (PP-1)	- 13.88ச.மீ (0.63%)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் தூத்துக்குடிக்கு தான பத்திரம் ஆவண எண்.1011/2024, நாள்.26.02.2024-ன் மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது

மின்வாரிய ஒதுக்கீடு - (PP-2)	- 15.00ச.மீ. (0.68%)

மூலை முடக்கு :

12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ x 1.50மீ

நிபந்தனைகள்:

1) அரசாணை எண்:18 மற்றும் 16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 04.02.2019 மற்றும் 31.01.2020-ல் பரிசீலிக்கப்பட்டதின் அரசாணை விட்டுவாதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (மை(1))துறை-ன் அரசாணை எண்-181, நாள் 09.12.2020 படி குத்தகைவிற்கு மனைப்பிரிவிற்கான சாலை, பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது ஒதுக்கீடு பகுதிகளை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதை உள்ளாட்சி பெயரில் உட்பிரிவு செய்தும் தார் சாலை அமைக்கப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

2) இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தில் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் நில ஆர்ஜிதம் செய்ய தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து உத்தேசங்கள் ஏதும் பெறப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3) நில உரிமம் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

4) திறவிட பகுதிகளிலும் மற்றும் புல்வெளி பகுதிகளிலும் எவ்வித கட்டிடமும் கட்டக் கூடாது.

5) இணையதள பதிவு எண். Y18XSBWS/THOOTHUKUDI/TCP/2024 ஆணை நாள்:29.02.2024 -ல் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

SWP/DTCP/THOOTHUKUDI/LAYOUT NO: 24/2024

PLANNING PERMISSION NO: 15/2024

உறுப்பினர் செயலர் (பொ) உதவி இயக்குநர்
தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமம் /
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
தூத்துக்குடி